05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள்

# NILAI KEHIDUPAN DALAM PAZHAMOZHI NAANUURU: SATU KAJIAN PERUMPAMAAN UNSUR ALAM

கலையரசி பாரதியார்
KALAIYARASI PARADIA

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2022

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# நன்றியுரை

*விட்டுக் கருமலம் செயவைத்த பின்னரும்*
*முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்*
*தொட்டக்கால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்*
*தட்டாமல் செல்லாது உளி*

(ப.நா.செய்யுள்: 209)

பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள் எனும் தலைப்பில் இவ்வாய்வினை செம்மையான முறையில் உருவாக்க என்னைத் தக்க முறையில் நெறிபடுத்தியதோடு ஆய்வுத் தொடர்பான பல நூல்களைக் கொடுத்துதவிய என்னுடைய நெறியாளர் முனைவர் மனோன்மணி தேவி M.A.அண்ணமலை அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவரது ஊக்கமும் உத்வேகமும் தான் என்னை வழிநடத்தியது என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. என்னுள்ளே மூழ்கிவிடாமல் கரை சேர்த்தவரும் அண்ணலே.

துவண்ட பொழுதெல்லாம் தோள் கொடுத்த அன்புத் தோழி நாகூர் பானுவிற்கும், தகைசால் இளவல் மணிவண்ணனுக்கும், நூலக ஆய்விற்குத் துணைநின்ற ஆசிரியை வனிதா அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என் இளவயதிலேயே தினசரி உரையாடலின் ஊடே பழமொழிகளைப் பாங்காய் உதிர்த்து எனக்கு பழமொழிகளின் மீது ஈர்ப்பை ஏற்படுத்திய என் பாட்டனார் திரு.மாரியப்பனுக்கும், வாழ்க்கைச் சூழலால் ஆரம்பக் கல்வியைத் தமிழ்ப்பள்ளியில் பயில முடியாத சூழல் வந்த போதும் அயராது எனக்குத் தமிழ்க்கல்வி புகட்டிய என் பெற்றோர் பாரதியார் பெண்டம்மா இணையருக்கும் என் உடன்பிறப்புகள் சாந்தி, ரத்தினேஸ்வரி,பரிமளா ஆகியோருக்கும். என்னுள் ஜனித்து என் உந்து சக்தியாய் விளங்கும் அருமை மகள் ஷம்யுக்தா நாராயணசாமிக்கும், உன் நிழலாய் நான் இருப்பேன் என்று அரவணைக்கும் என் உயிர்துணைக்கும் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



# ஆய்வுச் சுருக்கம்

பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள் என்னும் தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் நோக்கம் பழமொழி நானூறில் காணப்படும் இயற்கைக் குறியீடுகளை அடையாளங்கண்டு வகைப்படுத்தி; அது உணர்த்தும் உவமைப் பொருளை ஆராய்ந்து; உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்களை விளக்குவதாகும். இந்த ஆய்வானது தொல்காப்பிய உவமையியலைக் கோட்பாடாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. உவமையியலின் உருபுகளான வினை, பயன், மெய், உரு என்ற நான்கையும் அடிப்படையாகக் கொண்டு பழமொழி நானூறில் உள்ள நானூறு பழமொழிகளும் வகை படுத்தப்படுத்தப் பட்டுள்ளது. பழமொழிகளில் இடம்பெற்றுள்ள இயற்கை குறியீடுகளும் உயிருள்ளவை, உயிரற்றவை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த உவமைப் பொருள் மக்கள் தங்கள் தினசரி வாழ்வில் பின்பற்ற வேண்டிய விழுமியங்களை உணர்த்துகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**PERUMPAMAAN UNSUR ALAM DALAM PAZHAMOZHI NAANUURU**

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti perumpaan unsur alam dalam Palamoli Naanuuru ini dan mengkaji hubungkait dan penggunaan unsur alam sebagai kiasan untuk menengahkan nilai nilai murni dalam kehidupan manusia (*vaalviyal vilumiyangkal)* . Palamozhi Naanuru merupakan satu buku yang menghimpun koleksi empat ratus peribahasa yang berbentuk puisi. Sebagaimana yang kita sedia maklum Bahasa Kiasan yang digunakan dalam peribahasa adalah bahasa yang sopan dan bertujuan sebagai pengajaran. Unsur alam juga sering digunakan dalam perumpamaan.Pendekatan kualitatif iaitu kaedah kepustakaan telah digunakan dalam kajian ini. Objektif pertama kajian ini adalah untuk mengenalpasti adakah perumpamaan unsur alam digunakan dalam Palamozhi Naanuru. Objektif kedua pula bertujuan untuk mengkaji unsur alam ini dengan menggunakan Teori *Uvamaiyiyal*. Objektif ketiga pula adalah untuk mencari, menghubungkait dan menerangkan keberkesanan penggunaan unsur alam ini dengan kehidupan harian dan pengamalan nilai murni dalam kehidupan manusia. Hasil kajian mendapati Palamozhi Naanuru menggunakan unsur alam seperti pokok, tumbuh-tumbuhan, binatang, unsur alam (*aimperumbuutham*) seperti air, tanah, angin, api dan langit serta batu permata dan barang kegunaan harian sebagai perumpamaan dengan sifat manusia. Pengkaji telah mendapati seratus enam puluh empat puisi daripada empat ratus puisi menggunakan unsur alam sebagai perumpamaan. Teori *Uvamaiyiyal* dari *Tholkaappiyam* digunakan untuk mengkaji tajuk ini. Ini adalah kerana Teori *Uvamaiyiyal* mengatakan bahawa perumpamaan mempunyai 4 fungsi iaitu *vinai(perbuatan atau kelakuan), uru( warna), mei(bentuk atau sifat), payan (kepentingan atau kegunaan).* Pengkaji juga mendapati kesemua perumpamaan ini dapat dikaitkan dengan kehidupan harian dan hidup manusia akan lebih bererti dan bermanfaat jika maksud peribahasa ini diamalkan dalam kehidupan seharian.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**THE SIGNIFICANCE OF NATURE ELEMENTS IN PAZHAMOZHI NAANUURU**

## ABSTRACT

The aim of this study is to identify the nature elements or symbols found in Palamoli Naanuuru and find the relationship between usage of parables as methapor to instill the *vaalkai vilimiyangal* good values, ethics in a layman's daily life. Palamoli Naanurru is a book contains four hundred poems. Methapors in Palamoli Naanuru is used as symbols to educate human beings. A qualitative research design with library research method and Tholkaapiya *Uvamaiyiyal* was used to answer the three objectives of this study. The first objective of this research was to identify the nature elements or symbols in the four hundred poems.The second objective was to study the relationship between the usage of natural elements or symbols as methapor in daily life. The third objective was to find, relate and implication of the nature symbols in instilling the values and ethics in mankind. The findings of the research conclude that out of four hundred poems one hundred and sixty four poems used nature elements or symbols to instill the values in human. The *Uvamaiyiyal* theory by *Tholkaappiyar* was used in this research as this theory insists that the parabe used in any literary work explains the function of parable as *vinai*(verb*),uru*(physical),*mei*(adjective),*payan*( usage or advantage). The implication of this study is when nature symbols are used to instill ethics the mankind can accept it well as the man is also a part of nature and he is not being compared to another man. As thus, a further investigation should be riveted to the usage of nature symbols in instilling ethics in administration, as the mankind can lead a quality life.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **PERAKUAN KEASLIAN PENULISAN** | ii |
| **PENGESAHAN PENYERAHAN DISERTASI** | iii |
| **நன்றியுரை** | iv |
| **ஆய்வுச்சுருக்கம்** | v |
| **பொருளடக்கம்** | vi |
| **இயல் 1 – அறிமுகம்** | |
| 1.1 ஆய்வு முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 4 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 8 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 11 |
| 1.5 ஆய்வு வினா/ கருதுகோள் | 12 |
| 1.6 ஆய்வு நன்மைகள் | 13 |
| 1.7 ஆய்வு எல்லை | 15 |
| 1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள் | 15 |
| 1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள் | 15 |
| 1.8.2 துணைச் சான்றாதாரங்கள் | 16 |
| 1.9 கலைச்சொல் விளக்கம் | 16 |
| 1.9.1 பழமொழி | 16 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.9.2 பழமொழி நானூறு 19

1.9.3 இயற்கைக் குறியீடு 21

1.9.4 உவமைப் பொருள் 23

1.9.5 வாழ்வியல் விழுமியங்கள் 26

1.10 தொகுப்புரை 27

**இயல் 2 – முந்தைய ஆய்வு**

2.0 முன்னுரை 28

2.1 பழமொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் 29

2.1.1 பழமொழிகள் தொகுக்கப்பட்ட வரலாறு 29

2.2 பழமொழிகள் குறித்த முனைவர்ப்பட்ட ஆய்வேடுகள் 31

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.3 பழமொழிகள் குறித்த முதுகலைப்பட்ட ஆய்வேடுகள் 33

2.4 ஆய்வடங்கள் / ஆய்வுக்கட்டுரைகள் 34

2.5 தொகுப்புரை 36

**இயல் 3 – ஆய்வு நெறிமுறை**

3.0 முன்னுரை 37

3.1 ஆய்வு வழிமுறைகள் 38

3.2 ஆய்வு வடிவமைப்பு 39

3.3 ஆய்வு அணுகுமுறை 40

3.3.1 பகுப்புமுறை அணுகுமுறை 40

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.3.2 விளக்கமுறை அணுகுமுறை 41

3.4 தரவு சேகரிப்பு முறை 41

3.5 தரவு பகுப்பு முறை 44

3.6 ஆய்வுக் கோட்பாடு 46

3.7 கோட்பாட்டுக் கட்டமைப்பு 49

3.8 தொகுப்புரை 50

**இயல் 4 - பகுப்பாய்வுகளும் கண்டுபிடிப்புகளும்**

4.0 முன்னுரை 51

4.1 பழமொழி நானூறு 52

4.2 பழமொழி நானூறில் இயற்கைக் குறியீடு 53

4.3 உவமையியல் கோட்பாடு 55

4.4 பழமொழி நானூற்றில் உயிருள்ள பொருட்களின் வழி உவமை 56

4.4.1. விலங்குகள் 58

4.4.1.1.1 பசு 59

4.4.1.1.2 கன்று 61

4.4.1.1.3 எருது 64

4.4.1.1.4 நாய் 68

4.4.1.1.5 யானை 70

4.4.1.1.6 புலி 73

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi




4.4.1.1.7 பாம்பு 75

4.4.1.1.8 குரங்கு 75

4.4.1.1.9 தேரை 77

4.4.1.1.10 கரடி 78

4.4.1.1.11 முயல் 79

4.4.1.1.12 புழு 79

4.4.1.1.13 எலி 80

4.4.1.1.14 பூனை 81

4.4.1.1.15 குதிரை 82

4.4.1.1.16 நரி 83


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.4.2. பறவைகள் 84

4.4.2.1 மயில் 85

4.4.2.1 காகம் 87

4.4.2.3 குருவி 89

4.4.3 செடிகொடிகள் 91

4.4.3.1 பனை 91

4.4.3.2 மரம் 92

4.4.3.3 வாழை 96

4.4.3.4 வேம்பு 97


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.4.3.5 சுரை 97

4.4.3.6 பலா 98

4.4.3.7 பூ 99

4.4.3.8 கரும்பு 100

4.4.3.9 முள் / முட்செடி 100

4.5 பழமொழி நானூற்றில் உயிரற்ற பொருட்களின் வழி உவமை 101

4.5.1 ஐம்பூதங்கள் 101

4.5.1.1 நிலம் 102

4.5.1.2 குன்று 104

4.5.1.3 நீர் 105

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.1.4 தீ 110

4.5.1.5 வளி 112

4.5.2 பிறபொருட்கள் 113

4.5.2.1 கல் 113

4.5.2.2 மணி 114

4.5.2.3 கலம் 115

4.5.2.4 அகல் 116

4.5.2.5 அம்பு 117

4.5.2.6 கயிறு 118

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 4.5.2.7 | தயிர் | 120 |
| 4.5.2.8 | தலை | 122 |
| 4.5.2.9 | குடம் | 123 |
| 4.5.2.10 | ஓடு | 124 |
| 4.5.2.11 | சிலை | 125 |
| 4.5.2.12 | பொய்க்கால் | 126 |
| 4.5.2.13 | மை | 126 |
| 4.5.2.14 | பறை | 127 |
| 4.5.2.15 | பரல் | 128 |
| 4.5.2.16 | கூறை | 129 |
| 4.5.2.17 | வனை | 130 |
| 4.5.2.18 | ஊசி | 131 |
| 4.5.2.19 | ஓடம் | 133 |
| 4.5.2.20 | அச்சாணி | 134 |
| 4.5.2.21 | உளி | 134 |
| 4.5.2.22 | பால் | 135 |
| 4.5.2.23 | செல்வம் | 136 |
| 4.5.2.24 | விறகு | 138 |
| 4.5.2.25 | நார் | 139 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.5.2.26 நெய் 139

4.5.2.27 நெய்கலன் 141

4.5.2.28 ஏணி 142

4.5.2.29 வில் 142

4.5.2.30 வேல் 143

4.6 வாழ்க்கை விழுமியங்கள் 144

4.6.1 கல்வி 145

**இயல் 5- ஆய்வு முடிவு**

5.0 முன்னுரை 146

5.1 கலந்துரையாடல் 147

5.1.1 வாழ்வியல் விழுமியங்கள் 147

5.1.1.1 சான்றோர் இயல்பு 148

5.1.1.2 கீழ்மக்கள் இயல்பு 149

5.1.1.3 அரசியல் 150

5.2 முடிவுரை 153

5.3 பரிந்துரை 154

துணைநூற்பட்டியல் 155

பின்னிணைப்பு 158

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun

# இயல் 1

## அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.1 ஆய்வு முன்னுரை

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் மனிதன் அடைந்த பரிணாம வளர்ச்சியின் பயனாக அறிவின் துணை கொண்டு, கலையுணர்வின் நுண்மையான திறன்களைக் கொண்டு படைக்கப்பட்டவை இலக்கியங்கள். தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகள் வரலாறு உடையது. தமிழ் இலக்கிய வரலாற்றைப் பழங்கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியம், இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் என்று பலவகையாகப் பாகுபாடு செய்வது உண்டு (வரதராசன், 1972). ஒவ்வொன்றிலும் வாய்மொழி இலக்கியம் இடம்பெற்றுள்ளது. மனித சமூகம் தோன்றி, நெடுங்காலத்திற்குப் பின் மொழி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தோன்றி, எழுத்துகள் தோன்றாத காலத்தில் வாய்மொழி இலக்கியங்கள் மட்டுமே வழக்கில் இருந்தன (சக்திவேல்,1983).

தொல்காப்பியர் இலக்கியத்தை ஏழு வகையாகப் பிரித்துள்ளார்.

*பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,*
*அங்கதம், முதுசொல்லோடு, அவ்வேழ் நிலத்தும்,*
*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*
*நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்.* ( தொல் : 1336)

இதில் முதுசொல் என்பது பழமொழியைக் குறிக்கின்றது. பழமொழிகள் காலத்தின் கண்ணாடி என்றும் கூறலாம். அவை மானுட பாதிப்புகளை வெளிப்படுத்துகின்றன. நீதியைப் புகட்டுவதால் அவை அற இலக்கியம் ஆகின்றன.

சங்க இலக்கியங்களில் காணப்படும் காதல், கொடை, வீரம் என்று பாடிக்கொண்டிருந்த புலவர்கள் அடுத்த சில தலைமுறைகளில் நீதிகளைப் பாடினர். அது சங்கம் மருவிய காலம் அல்லது நீதிநூல் காலம் என்று அழைக்கப்பட்டது. தமிழில் நீதி இலக்கியம் தழைத்த காலமும் இதுவே. மக்கள் நெறிமுறை தவறாத வாழ்க்கை வாழ்கின்றபோது அறிவுரை சொல்வது அவசியமில்லைதான். ஆனால், தீயவழி செல்கின்றபோது நெறிப்படுத்தவும் ஏதேனும் ஓர் ஊடகம் தேவைப்படுகிறது. அவ்வூடகம் ஞானம் பெற்ற ஞானியின் அறக்குரலாகவோ, அறநூல்களின் கருத்துக்குவியலாகவோ, நல்ல மனிதர்களின் நெறிப்படுத்தும் குரலாகவோ இருக்கலாம். இம்முயற்சியை அற இலக்கியக்காலத்தில் அற இலக்கியங்களின் வழி புலவர்கள் மேற்கொண்டனர் (பொன்னுசாமி, 2003).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ்மொழி பரந்த இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டது. இதன் கண் அமைந்த இலக்கியங்களைக் கால அடிப்படையிலும், பாடுபொருள் அடிப்படையிலும் வகைப்பாடு செய்துள்ளனர். அவ்வகையில் சங்க இலக்கியங்களை அடுத்து அமைவது நீதி இலக்கியங்கள் என்னும் அற இலக்கியங்கள் ஆகும் (பொன்னுசாமி,2003). சங்க காலம் எல்லா நிலையிலும் அமைதி நிரம்பியதாக இருந்தது. ஆனால், சங்கம் மருவிய காலச் சூழல் குழப்பங்களின் மொத்த வடிவமாய் இருந்தது. தடம் மாறிப் போன மக்களை மீட்டு நல்வழிப்படுத்தும் பொறுப்பைப் புலவர்கள் எடுத்துக்கொண்டு நீதி இலக்கியங்களைப் படைத்தனர். சங்கம் மருவிய காலத்தில் அற இலக்கியங்களின் பாடுபொருள் காதலையும் வீரத்தையும் விடுத்து நீதியைக் கைக்கொண்டது.

கடைச்சங்கத்தில் பல நூல்கள் எழுதப்பட்டன. பொதுவாக அவை மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என இருவகைப்படுத்தப்பட்டுள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டும் மேற்கணக்கு நூல்கள். கீழ்க்கணக்கு நூல்கள் மொத்தம் பதினெட்டு. (சண்முகம்பிள்ளை,2012). முன்னது அடி வரையறைமிக்கது; பின்னது அடி வரையறை குறைந்தது. சங்க நூல்களில் ஆசிரியத்தின் செல்வாக்கு மிகுதி; கீழ்க்கணக்கு நூல்களில் வெண்பாவின் செல்வாக்கு மிகுதி. மேலும் கீழ்க்கணக்கு நூல்களில் மொழிச்செறிவு குறைகின்றது. வடசொற்கலப்பு எண்ணிக்கையும் கூடுகிறது. (சுப்பிரமணியன், 2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.2 ஆய்வுப் பின்னணி

பழமொழி தோன்றிய காலத்தையும், இடத்தையும் ஆராய்வது என்பது மிகவும் அரியச் செயலாகும். பழமை + மொழி, பழமொழி; என்ற அடைமொழியிலிருந்தே அது மிகவும் பழமையானது என்று நமக்குத் தெரிகிறது (பார்த்தசாரதி,1985). மனித வாழ்க்கை வரலாற்றின் அருமை பெருமைகளையும் சிறப்புகளையும் அளவிடுவதற்கு மக்களால் வழங்கப்பட்ட கலைகளே அளவுகோலாக அமைகின்றன. அவற்றுள் சிறந்து விளங்குவது பழமொழியாகும். நம் முன்னோர்கள் வாழ்க்கையில் கண்டுணர்ந்த அனுபவத்தின் அடிப்படையில் உருவான பழமொழிகள், ஒவ்வொருவரும் தங்களின் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அவசியமான நெறிமுறைகளாகும். பிற்காலச் சந்தியினர் மனத்தில் ஆழமாகப் பதிய வைப்பதோடு நினைவில் நிற்கவும், இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தையில் பல கருத்துகளைச் சொல்லிச் சென்றுள்ளனர் நம் முன்னோர்கள்(மெய்யப்பன்,1996). அவற்றை நாம் பழமொழிகள் என்று அழைக்கின்றோம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரும்பான்மையான பழமொழிகள், மக்களின் மனோநிலையினையும் அவர்களின் நடத்தையையும் எடுத்துரைக்கின்றன. பழமொழிகள் மக்களின் அறிவினாலும் அனுபவத்தினாலும் உருவாகிய வாய்மொழி உரையாகும். மேலும், மக்களின் ஆழ்ந்த அனுபவங்களின் அழுத்தமான உச்சரிப்புகளே பழமொழிகள் (மெய்யப்பன்,1996). பல்வேறு மன இயல்புகளில் உரைக்கப்பட்டிருக்கும் பழமொழிகள் மக்களின் அனுபவத் தழும்புகளாகும். இப்பழமொழிகளின் வளத்தைக் கொண்டே ஒரு மொழியின் வளத்தை, அச்சமுதாய மக்களின் பண்பாட்டை, அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளை அறிய முடியும். மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்தும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கருவியாகவும் பழமொழிகள் விளங்குவதால் அவை இலக்கியமாகின்றன. (முத்துக்குமரன்,1998).

பழந்தமிழர்கள், தங்கள் வாழ்வில் கண்ட உண்மைகளைத் தங்கள் பட்டறிவால் பெற்ற விழுமிய கருத்துகளை நாட்டு மக்களிடையே உலவவிட்டனர். அவ்வுண்மைகளும் கருத்துகளும் மக்கள் நெஞ்சில் இனிது உலாவந்தன; பாமரர் முதல் படித்த பண்பாளர்வரை அனைவரும் அவற்றைப் போற்றினர். காலத்தால் முதுமையுடையனவாதலால் அவை முதுமொழி என்ற பெயரையும் பெற்றன (நன்னன்,2014) பழமொழி என்பது நீண்ட நெடிய வாழ்க்கை அனுபவத்தின் சாரமாகும். நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளைப் பழமொழி இலக்கியத்தின் பாக்கள் எடுத்துக் கூறுகின்றன. மணிக்கணக்கில் விவரித்துச் சொல்ல வேண்டிய பல தத்துவார்த்தமான செய்திகளைக்கூட பழமொழிகள் ஒரே அடியில் விளக்கிவிடும் அளவு வலிமை பெற்றன. நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளைப் பழமொழி இலக்கியத்தின் பாக்கள் எடுத்துக்கூறுகின்றன. பழமொழிகள் வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டும் விளக்குகள் என்பதில் ஐயமில்லை (பொன்னுசாமி, 2003).

புலவர் பெருமக்கள் தாங்கள் விளக்க முற்பட்ட கருத்துகளைப் பழமொழிவாயிலாய் வெளியிடுதலை மேற்கொண்டனர். அறிவின் நுட்பத்தை அறிவிக்க ஆழமான பொருளைச் சுருங்கிய சொல்லால் அமைத்துப் புகழ்பயக்கும் விழுமிய கருத்துகளைப் பாடலுல் பொருத்தி, யாவரும் எளிதில் உணருமாறு செய்தனர்( நன்னன்,2014). சுருக்கமாக, கருத்துகளை எடுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்தும் பழமொழிக்குத் தொல்காப்பியர் ஏழு கூறுகளை இலக்கணமாக வகுத்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


*நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்*
*ஒன்மையும் என்றிலை விளங்கத் தோன்றிக்*
*குறித்த பொருளை முடித்தற்கு வரூம்*
*ஏது நுதலிய முதுமொழி என்ப*

*( தொல்: 1433 )*

எனவே, பழமொழிகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மக்களிடையே பழகி, விளங்கி வந்திருப்பதை உணரலாம். இந்தப் பாடலின் வழி பழமொழியின் கூறுகளான நுண்மை, சுருக்கம், ஒளி, உடைமை, எளிமை, குறித்தபொருளை முடித்தல், ஏது நுதலுதல் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இக்கூறுகளின் பொருள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

1. நுண்மை

   நுண்மை என்பதற்குக் கூர்மை என்றும் நுட்பமாகப் பொருளை எடுத்துரைத்தல் என்றும் பொருள்படும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2. சுருக்கம்

   சில சொற்களால் இயன்று வந்து சுருக்கமாக இருக்க வேண்டும்.

3. ஒளி

   என்றும் மாறாத உலக உண்மை அல்லது மெய்மை என்பதாகும்.

4. உடைமை

   மக்களுக்குப் பழக்கமாகி பழமையான மொழியாக இருத்தல் வேண்டும்.

5. எளிமை

   எளியச் சொற்களைக் கொண்டு கல்லாதார்க்கும் விளக்கம் தரும் வகையில் இருத்தல்.

6. குறித்தபொருளை முடித்தல்

   குறிப்பிட்ட பொருளை மட்டும் துல்லியமாகக் காட்ட வேண்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


7. ஏது நுதலுதல்

ஆதாரம் அல்லது எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துதல் என்பதாகும்.

பழமொழியைத் தொல்காப்பியர் முதுமொழி என்று குறிப்பிடுகிறார். முதுசொல், பழஞ்சொல், சொலவு, சொலவடை, பழமொழி, வசனம் என்றும் மக்கள் வழங்குகிறார்கள். மலையாளத்தில் பழஞ்சொல் என்றும், கன்னடத்தில் நாண்நொடி என்றும் குறிப்பிடப்படுகிறது (பார்த்தசாரதி,1985).

தமிழ்மொழியிலுள்ள மிகப் பழைய இலக்கியங்களிலும் பழமொழிகளின் வடிவங்கள் காணப்படுகின்றன. “மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்” என்ற பழமொழி கொன்றை வேந்தனிலும், “முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்” என்ற பழமொழி திருக்குறள், அகநானூறு, பழமொழி நானூறு ஆகியவற்றிலும் காணப்படுவதால் பழமொழிகளின் காலத்தை வரையறுப்பது மிகவும் அரியதாகும். பழமை, முதுமை, தொன்மை என்பதுபோல் அதற்கு முன் இணைந்திருக்கும் அடைமொழிகளே அதன் தொன்மையை உணர்த்தப் போதுமானவை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அகநானூற்றுப் பாடலில், பழமொழியைத் தொன்றுபடு பழமொழி என்று குறிப்பிடுகிறார் மாமூலனார். அதாவது, நல்லது செய்தல் நல்லதே நடக்கும். அது பொய்த்து விட்டதோ! என்று பேசுவது போல், பாடல் அமைந்துள்ளது.

அம்ம வாழி, தோழி! இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதுஇல் என்னும்
தொன்படு பழமொழி இன்றுபொய்த் தன்றுகொல்? ( அகம் :101)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழில் தோன்றிய முதல் பழமொழி அடிப்படையிலான வெண்பாத் தொகுப்பு நூல் பழமொழி நானூறு என்னும் பதினென்க்கீழ்க்கணக்கு நூலாகும். முன்றுறையனார் எழுதிய இந்நூலில் பழமொழிகளை மையமாகக் கொண்ட 400 வெண்பாக்கள் உள்ளன(பார்த்தசாரதி,1985).

பழமொழிகள் தொடர்பாக, பற்பல ஆய்வுகள் நடத்தப்பட்டிருந்தாலும் பழமொழிகளில் இயற்கைக்குறியீடுகள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள் குறித்த ஆய்வு இதுவரையிலும் இல்லை. எனவே, ஆய்வாளர் பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள் எனும் ஆய்வை இங்கு மேற்கொண்டுள்ளார்.

05-45068 tbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

இலக்கியம் என்ற சொல்லை இலக்கு + இயம் என்று பிரிக்கலாம். ஓர் இலக்கை நோக்கி இயம்புவதால் அது இலக்கியம் என்றழைக்கப்படுகிறது. மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க இலக்கியங்கள் வழிகூறுகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். ஆட்சி செய்வதில் தவறிழைத்தவர்களை அறம் தண்டிக்கும்; ஊழ்வினை, விடாது பற்றித் தொடரும்; கற்புடைப் பெண்டிரை உயர்ந்தவர்கள் போற்றுவர் என்றுரைக்கும் சிலப்பதிகாரத்தை இலக்கிய நூலாக விரும்பிப் படிக்கும் நம் சமுதாயத்தினர் பழமொழிக்கு அந்த முக்கியத்துவத்தைத்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தருவதில்லை. இதுவே, வாழ்க்கை விழுமியங்களை உணர்த்தும் பழமொழிகளை ஆராய ஆய்வாளருக்கு உந்துதலாக விளங்கியது.

பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கி வரும் பழமொழிகள் வாழ்வியலை நமக்கு முன்னுரைக்கின்றன. சமுதாய உறவுமுறைகளையும், குடும்ப உறவு முறைகளையும் செம்மைப்படுத்துவதில் பழமொழிகளில் பதிவாகியுள்ள அன்பும் அறிவும் பெரும் பங்கு வகிக்கின்றன. பழமொழிகள் பழங்காலத்தில் இருந்தே மக்களிடையே வழங்கி வருகின்றன. காலந்தோறும் அவற்றிற்கிடையே மாற்றங்கள் சூழலுக்கு ஏற்ப ஏற்படுவதுடன் புதியனவும் தோன்றுகின்றன. பழமொழிகள் வாழ்க்கை ஒழுங்கிற்கு எழுதாச்சட்டங்களாக நின்று வழங்கி வந்துள்ளன. முன்னோர்களின் முதிர்ந்த அனுபவத்தில் உருவான மனித வாழ்க்கைக்கு வேண்டிய மிக முக்கியமான அனுபவங்கள் அல்லது அறிவுரைகள் மக்கள் மனத்தில் படும்படியாகவும் பொதுமைபடும் நிலையிலும் கேட்போரை அறிவுறுத்தும் நிலையிலும் உருவாக்கம் பெற்றுப் பரம்பரையாக மக்கள் மத்தியில் வாய்வழிவாழும் பழமையான எளிமையான சுருக்கமான சொற்கலையாக்கமே பழமொழி எனப்படுகிறது (விஜயலட்சுமி, 2009).

05-4506832 ptbupsi

ஆதலால், பழமொழியைக் கற்றுக்கொள்ள, தினசரி வாழ்க்கையில் பயன்படுத்த ஒருவர் சிரமப்படத் தேவையில்லை. ஏனென்றால், பழமொழிகள் இயல்பாக இயற்கைக் குறியீடுகளைக் கொண்டே ஆழமான பொருளைச் சுட்டக் கூடியவை. ஆயினும், இன்றைய மக்கள் பழமொழிகள் வெறும் சொல்லடைகள், பழமையான வாக்கியங்கள், முதியோர்கள் மட்டுமே பயன்படுத்துவர் என்றெண்ணி புறந்தள்ளி விட்டனர். திருக்குறளை நீதி நூலாக பார்க்கும் நம் சமுதாயம் அதே பதிணெண்க்கீழ்க்கணக்கில் அமைந்துள்ள பழமொழிக்கு அங்கீகாரத்தை தரவில்லை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்பதே ஆய்வாளர் முன்நிறுத்தும் சிக்கல். இந்த வேட்கையே, ஆய்வாளரை பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்களை ஆராயத் தூண்டியது.

தமிழினம் உலகின் தொன்மையான இனங்களில் ஒன்றென்பதால், அது பெற்றிருக்கும் பழமொழிக் கருவூலம் அளவாலும் தரத்தாலும் பெரும் பெயர்க்கு உரியது. தமிழ்ப்பழமொழிகள் வாழ்வின் எல்லாக் கூறுகளைப் பற்றியும் பேசுபவை. அவை பேசாத வாழ்க்கை அனுபவம் ஏதுமில்லையென்றே சொல்லலாம். பெரும்பேதையிலிருந்து பேரறிஞன் வரை, எல்லாவகை மாந்தர்களும் தமிழ்ப் பழமொழிகளிலிருந்து நற்பயன் பெறலாம்; பாடம் கற்றுக்கொள்ளலாம். எப்படிச் செயல்படுவது என்று திண்டாடுகின்ற நிலையேற்படின், கை கொடுக்கும் பழமொழிகள் பலவுண்டு. அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், உறக்கம் பற்றி மட்டுமல்லாமல் வாழ்க்கைத் தத்துவங்கள் பற்றிச் சொல்கின்ற பழமொழிகளும் நுட்பமான ஆன்மிகம் பற்றிப் பேசும் பழமொழிகளும் உண்டு. அவையெல்லாம் கருத்துகளைக் கலையழகோடு சொல்வதையும் கற்றவர்க்கும் பாமரர்க்கும் ஒருசேரப் பயன்படுவதையும் சொல்லத் தேவையில்லை. தமிழினத்தின் தொன்மையையும், தமிழ்ப்பண்பாட்டின் பெருமையையும் அவை பிரதிபலிக்கின்றன. ஆகவே, பழமொழிகள் இலக்கியம் இல்லை என்று மறுக்க இயலாது. அது மக்கள் இலக்கியமாகக் கருதப்பட்டாலும், அதுவும் இலக்கியமே என்று நிறுவிடவே ஆய்வாளார் முன்றுரையானார் தொகுத்திட்ட பழமொழி நானூறு எனும் நூலை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இந்நூல், ஒவ்வொரு பழமொழியையும் சொல்லி, அதன் அடிப்படையில், ஒரு நீதியை விளக்கும் ஒவ்வொரு செய்யுளாக, மொத்தம் நானூறு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செய்யுட்களைக் கொண்டுள்ளது. இவையனைத்தும் வெண்பா அமைப்பில் அமைந்தவையாகும். பழமொழிகள் வெறும் மேடைப்பேச்சினை அலங்கரிக்கும் அணியாக மட்டும் அமைந்திடாமல் மனிதகுல வாழ்க்கை மேம்பாட்டிற்கு உதவிட வழிவகுக்கவே ஆய்வாளார் இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார்.

## 1.4 ஆய்வு நோக்கம்

பழமொழிகள் மக்களின் மொழிவளத்தையும் பண்பாட்டு நெறிமுறைகளையும் மனிதனின் வாழ்க்கை வரலாறுகளையும் எடுத்துரைக்கின்றன. (Noraini Shahida Ishak, M Mascitah Mansor, 2011). தமிழின் தொன்மை செழுமைக்கும் தமிழரின் பண்பாட்டுச் செம்மைக்கும் சான்றுகளாக மிளிரும் பழமொழிகள் சூழ்நிலைக்கேற்றவாறு உரிய உணர்வோடும் பொருளோடும் பயன்படுத்தப்படும்போது தமிழர் பண்பாடு சிறக்கும்.

'பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள்' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. பழமொழி நானூறில் காணப்படும் இயற்கைக்குறியீடுகளை அடையாளங்கண்டு வகைப்படுத்துதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2. இயற்கைக்குறியீடுகள் காட்டும் உவமைப் பொருளைத் தொல்காப்பிய உவமையியல் கோட்பாட்டின் வழி ஆராய்தல்.
3. இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்களை விளக்குதல்.

## 1.5 ஆய்வு வினா / கருதுகோள்

'பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள்' என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு கீழ்க்காணும் கருதுகோளைக் கொண்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1. பழமொழி நானூறில் காணப்படும் இயற்கைக்குறியீடுகளும் அவற்றின் வகைகளும் யாவை?
2. பழமொழி நானூறில் காட்டும் உவமைப் பொருள் எங்ஙனம் தொல்காப்பிய உவமையியல் கோட்பாட்டிற்குப் பொருந்தி வருகிறது? பொருந்துகிறது?
3. பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.6 ஆய்வு நன்மைகள்

'பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள்' என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வானது, தொல்காப்பிய உவமையியல் கோட்பாட்டுக்குப் பொருத்திப் பார்க்கப்படுகிறது. திருக்குறள், நாலடியார் போன்ற பிற சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள இயற்கை குறியீடுகள் பழமொழி நானூற்றிலும் உள்ளதா என்று ஆராயப்படுகிறது.

மேலும், இயற்கை குறியீடுகள் குறித்த ஆழமான புரிதலையும் இந்த ஆய்வு ஏற்படுத்தும். பழமொழிகள் குறித்த முந்தைய ஆய்வுகளை ஆராயும் பொழுது, 'பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள்' எனும் தலைப்பில் மலேசிய நாட்டில் எவரும் ஆய்வுகளைச் செய்யவில்லை என்பது புலனாகியது. இந்த ஆய்வு பழமொழிகளில் காணப்படும் உவமைகளுக்கும் தொல்காப்பிய உவமையியலுக்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்தும்.

பழமொழிகள் சரியான சூழல்களில் கையாளப்படும் பொழுது பழமொழிகளின் உணர்வுகள் சிறப்பாகப் பிரதிபலிக்கப்படும். மக்கள் தங்கள் அனுபவத்தால் பிறக்கும் பழமொழிகளை அன்றாட பேச்சு வழக்கில், இன்ப நிகழ்வில், துன்ப நிகழ்வில், கேலியாகவும், ஏசலாகவும், பழமொழிகளைக் கையாளுகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மக்கள் நம் சிக்கல்களுக்கும் பேச்சுக்கும் அழகைத் தருவதற்காகப் பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர். பயன்பாட்டில் அதிகம் இடம் பெறாத பழமொழிகள் நாளடைவில் மறைந்தும் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல புதிய பழமொழிகள் தோன்றியும் வருகின்றன. காலத்திற்கும் பேச்சாளர்கள் தங்கள் கருத்து வளத்திற்கும் பழமொழிகளைப் பயன்படுத்தி வருகின்றனர் (பாக்யமேரி,2008)

பழமொழி, அதனைப் பயன்படுத்தக்கூடிய சமூகத்தின் கருத்துகளையும் பண்பாட்டுக்கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அது, சூழலுக்கேற்றவாறு பயன்படுத்தப்படும்பொழுது தெளிவான பொருளைத் தரும். சூழலுக்கேற்ப பயன்படுத்தாவிட்டால் பொருள் தராது. பழமொழிகளுக்குப் பொருள் விளக்கங்களையும் மக்கள் தம் அனுபவத்தில் இருந்தே பெற்றுக்கொள்கிறார்கள்.
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
பழமொழிகள் வாழ்க்கைப் பயன்பாட்டிற்கு உதவுவதால் நன்மைத் தீமைகளைச் சுட்டுவதால் நீதிக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

மருவி வரும் பழமொழியின் பயன்பாட்டையும் அதில் அடங்கியுள்ள உவமைகளின் நுகர்வையும் அதிகரிக்க இந்த ஆய்வு இயன்ற அளவு துணை நிற்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வு எல்லை

பழமொழி நானூறு எனும் நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் கல்வி, அரசியல், அறிவியல், மருத்துவம், வாழ்வியல் எனப் பல தகவல்களை விளக்கியிருந்தாலும்; பழமொழிகளில் உவமைப்பொருள்களாக கையாளப்பட்டிருக்கும் இயற்கைக் குறியீடுகளும் அவை உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்களும் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.8 ஆய்வு சான்றாதாரங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.81. முதன்மைச் சான்றாதாரம்

ஆய்வுக்கான முதன்மைச் சான்றாதாரமாகப் புலியூர்க் கேசிகன் உரை எழுதிய பழமொழி நானூறு எனும் புத்தகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னுரையனாரால் எழுதப்பட்ட நானூறு செய்யுள்களைக் கொண்ட இப்புத்தகத்தின் வழி, அந்தக் காலத்தில் வழங்கிய பழமொழிகளை அறிய முடிகிறது. முன்னுரையனார் வடித்த இப்பழமொழிகளைப் புத்தக வடிவில் நமக்குத் தொகுத்து வழங்கியவர் இராச மாணிக்கம் பிள்ளை ஆவார் ( வரதராசன்,1972).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.2 துணைச் சான்றாதாரங்கள்

ஆய்வாளர், பழமொழிகள் தொடர்பான ஆய்வேடுகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், மாநாட்டு மலர்கள் ஆகியவை இந்த ஆய்வுக்குத் துணைச் சான்றாதாரங்களாகப் பயன் படுத்தியுள்ளார்.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

இந்த இயலில் ஆய்வாளர் ஆய்வின் தலைப்பில் உட்பட்ட அனைத்துக் கலைச்சொற்களுக்கும் விளக்கம் தந்துள்ளார். எனவே, 'பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள்' என்னும் தலைப்பிற்கான விளக்கத்தை இங்கு காண்போம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.1 பழமொழி

நம் முன்னோர்களின் வாழ்விலே பூத்துக் காய்த்துக் கனிந்த அனுபவ வாக்குகளே பழமொழிகள். அந்த வாக்குகளை மனத்தில் நிறுத்தி, நடத்தைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளும்போது, அப்படிக் கொள்பவரின் வாழ்வு வளமாகிறது(புலியூர்க்கேசிகன்,1989). மனித அனுபவத்தின் வெளிப்பாடு பழமொழி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மனிதர்களுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், குறிக்கோள்கள் போன்றவற்றை வெளிப்படுத்த பழமொழிகள் பயன்படுகின்றன. பழமொழி என்பதற்குப் பழமையான மொழி, பழகிய மொழி, பழுத்த மொழி எனவும் முதுமொழி, மூதுரை, முன்சொல், தொன்மொழி வாய்மொழி,நெடுமொழி என பலப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன(விஜயலட்சுமி, 2009). மேலும், தொன்றுபடுமொழி, பழஞ்சொல், நாட்டுவாக்கியம், நீதிமொழி, வழக்கு மொழி எனவும் அழைக்கப்படுகின்றன. பழமொழிகளை நீதியுரை, நன்னெறி, நல்வழி என்றும் அறநூல் வகையிலும் பதினெண்கீழ்க்கணக்கு வகையிலும் சேர்ந்தது என்பர். பழமொழிகள் உயிர்த்துடிப்பு உடையவை; ஒளியுடையவை; விளக்கம் தருபவை; நம்பத் தகுந்தவை; பழங்கால மக்களின் பழக்க வழக்கங்களை மனக்கண் முன் நிறுத்தும் ஆற்றல் உடையவை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பழமொழிகள், நாட்டுப்புற கவிதைகள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள், நாட்டுப்புற இசைகள், நாட்டுப்புறத் தொன்மங்கள், நாட்டு வீரக் கதைகள் போன்றவை மொழியினால் ஆக்கப்பட்ட கலையாக்கங்களாகும். இத்தகைய சொற்கலையாக்கங்களில் ஒன்றுதான் பழமொழியாகும். கதைகளை அடிப்படையாக் கொண்டும், உண்மை நடப்புகள், நாட்டு நடப்புகள், வீட்டு நடப்புகள், சம்பவங்கள், இயற்கைச் செயல்கள், உட்பட சில எடுத்துக்காட்டுகளோடு சொல்லப்பட்ட சில எடுத்துக்காட்டுகளோடு சொல்லப்பட்ட அனுபவ உண்மைகளே பழமொழிகளாகும் (பாலசுப்ரமணியன்,1959).

தொல்காப்பியர், செய்யுளியல் நூற்பா 78-ல், செய்யுள் யாப்பு ஏழு வகைப்படும் எனவும், அவற்றுள் பழமொழியாப்பு ஒன்றென கூறுகின்றார். மேலும் பழமொழியில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நுண்மை, சுருக்கம், ஒளி, உடைமை,எளிமை, குறித்த பொருளை முடித்தல் , ஏது நுதலுதல் ஆகிய ஏழு கூறுகள் இருத்தல் வேண்டும் என்கிறார். இருப்பினும், பழமொழிகளின் இலக்கணம் என்ற திசையில் நோக்கினால் பழமொழிகளின் இயல்பு கூறுகள் கீழ்வருமாறு:

1. பாமர மக்களிடையே வழக்கத்தில் இருத்தல்.
2. எதுகை, மோனை அல்லது பிறவகை ஓசை நயம் இருத்தல்.
3. கருத்தை நேரடியாகக் குறிப்பிடுதல்
4. அனுபவ மொழியாக இருத்தல் வேண்டும்.
5. உவமைகள் காணும் வகையில் இருத்தல் வேண்டும்.
6. சுருக்கமாக இருத்தல் வேண்டும்.
7. மாற்றுச் சொல்லை ஏற்கக்கூடிய நெகிழ்ச்சி வேண்டும்.
8. உணர்ச்சி அடிப்படையில் அமைதல் வேண்டும்.
9. உலக வழக்காக ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
10. எளியச் சொற்களால் அமைந்திருத்தல் வேண்டும்.
11. அழுத்தமான நடை வேண்டும்.
12. நோக்குக் கொண்டதாக இருக்க வேண்டும்.
13. பழமையானதாய் இருத்தல் வேண்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவையே பழமொழிகளுக்கு இருக்க வேண்டிய பண்புகளாகும். பண்பட்ட ஒவ்வொரு மொழியிலும் பழமொழிகள் உண்டு. தமிழில் பல்லாயிரக்கணக்கான பழமொழிகள் உள்ளன. மொழியின் வளமும், காலத்தின் பெருமையும் இதற்குச் சான்றாகும். ஒரு கருத்தைக் கூறும்போது, அதனை நேரடியாகக் கூறாது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மறைமுகமாக உரைக்கும் தமிழ் மரபின் தன்மை கொண்டது பழமொழி (பாலசுப்ரமணியன்,1959).

முதுமொழி என்பது பழமொழி. வாழ்க்கை அனுபவத்திலிருந்து தானே முகிழ்க்கும் மொழி இது. “ஏது நுதலிய முதுமொழி” என்பார் தொல்காப்பியர். இன்றைக் காரணம் காட்டி நிறுவதற் பொருட்டே முதுமொழி வருகின்றது. பழந்தமிழில் ‘முதுமை’ என்பது அறிவுமுதிர்ச்சியைச் சிறப்பாகக் காட்டியுள்ளது. எனவே பழமொழி எனில் பழமையான, தொன்று தொட்டுச் சொல்லப்பட்டு வருகிற மொழி எனவும் முதுமொழி எனில் அறிவுநலம் மிக்க அனுபவ மொழி எனவும் கொள்ள வேண்டும் (தமிழண்ணல், 2005).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 பழமொழி நானூறு

பதினென்கீழ்க்கணக்கில் உள்ள முப்பெரும் அறநூல்களில் பழமொழியும் ஒன்று. பதினென்க்கீழ்க்கணக்கு நூல்களில் மூன்றாவது நூலாக பழமொழி நானூறு குறிக்கப்பெறுகிறது. திருக்குறள், நாலடியார், பழமொழி என்று வரிசைப்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு கதையோ; வரலாற்று நிகழ்வோ உரைக்கப்பட்டுப் பாடலின் இறுதியில் நீதி சுட்டப்படுவதால் இந்நூல் பழமொழி எனப்பெயர் பெற்றப்பட்டது (பாக்யமேரி,2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் முன்றுறை அரையனார் என்பவரால் எழுதப்பட்ட இப்புத்தகம் நானூறு வெண்பாக்களைக் கொண்டது. அரையனார் என்னும் சொல்லால் இவரை அரச குடியினர் என்று கூறலாம். முன்றுறை என்பது கடல் அல்லது ஆற்றின் கரைகளில் மக்கள் நீராடவும்; படகு, வள்ளம் போன்றவற்றில் சென்றுவரவும் வசதியாக அமைந்த துறைகளையே முன்றுறை என்பார்கள். கொற்கை முன்றுறை, கழார் முன்றுறை, காவிரி முன்றுறை, வைகை கரையின் திருமருத முன்றுறை என்று பல முன்றுறைகள் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றைச் சார்ந்த பகுதியில் இவர் பிறந்திருக்கலாம். (புலியூர்க்கேசிகன்,1989).

சங்கம் மருவிய காலத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றுக்கு அடுத்த பழைய நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது பழமொழி நானூறு. முன்றுரையனார் பழமொழிகளை அமைத்து நானூறு வெண்பாக்கள் படி அனுபவத் தெளிவான நீதிகளையும் கருத்துக்களையும் உரைத்துள்ளார். (இளங்கோ, 1956)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பழமொழிகள் எல்லா இலக்கியங்களிலும் இடம்பெறுவது இயல்பு. இருப்பினும், இந்நூலின் சிறப்பு என்னவென்றால், பழமொழிகளைத் திரட்டித் தொகுப்பதோடு நில்லாமல் ஒவ்வொரு பழமொழியையும் கொண்டு செய்யுளமைத்துத் தந்த வண்ணம் போற்றுதற்குரியது(கிருஷ்ண பிரசாத்,2017).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஒவ்வொரு பழமொழியையும் வைத்து அதைக்கொண்டு ஒரு நீதியை விளக்கும் செய்யுள்கள் மொத்தம் நானூறு. ஆதலால், இந்நூலின் பெயர் பழமொழி நானூறு ஆயிற்று. நானூறு என்னும் தொகையமைப்பு புறநானூறு, அகநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு என்னும் தொகை நூல்களுள் நிலவுதல் போல நானூறு செய்யுட்கள் என்னும் தொகுப்பு மரபைத் தழுவியதாகும்(கிருஷ்ண பிரசாத்,2017).

ஐந்து பெரும் பிரிவுகளில் மொத்தம் முப்பத்து நான்கு இயல்களில் இது பகுக்கப்பட்டுள்ளது. முதன்முதலாகப் 1874-இல் பழமொழி நானூறை அச்சேற்றி வெளியிட்டவர்கள் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் ஆவார். (பார்த்தசாரதி,1985). இதன் பிறகே, பழமொழி நானூற்றைப் பலரும் தொகுத்தனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.3 இயற்கைக் குறியீடு

பழந்தமிழ் இலக்கியம் மக்களின் வாழ்வோடு இயற்கையை இயைத்துக் கூறும் இலக்கியமாகும். ஆயினும், புலவர் எவரும் மலையையோ, ஆற்றையோ, கடலையோ வருணித்து இயற்கைக்காக இயற்கையைப் பாடும் பாட்டுக்களை எழுதவில்லை. இயற்கையை அவர்கள் வருணித்த இடங்களில், மக்களின் வாழ்வே பாட்டின் உரிமைப் பொருளாக (உரிப்பொருளாக) விளங்குகிறது; இயற்கை அவ்வாழ்வுக்குப் பின்னனியாகவே உள்ளது( இளங்கோ,1956)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



இயற்கை மனிதனுடைய வாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாகும். மனிதனைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருட்கள் அவனைச் சிந்திக்கச் செய்கின்றன. அச்சிந்தனைகளின் வெளிப்பாடு இலக்கியங்களாக உருவாகின்றன(குருசாமி,2012).

இயற்கையைப் பாடாதத் தமிழ்ப்புலவர்களே இல்லை. இவர்கள் இயற்கையை நுணுகி ஆராய்ந்து, பின்னர் தமிழ்நாட்டு நிலத்திற்கேற்ப வரையறுத்து விலங்குகளையும் பறவைகளையும் சிறப்புடன் விளித்து, சுட்டி மனித வாழ்க்கையைப் பாடியுள்ளனர்.(திருமலை முத்துசிவாமி )

மெய்யப்பன்(1996) தனது தமிழ்ப்பழமொழிகளில் அறிவியல் எனும் நூலில், இயற்கையைப் பார்த்து, அதன் செயல்முறைகளை வழிகளாக்கி, அவற்றையும் வாழ்க்கைக்குப் பயன்தரத்தக்க வகையில் ஒரு பொதுவொழுக்கக் கருத்தைக் கூறுமாறு ஒரு பாடலின் உட்கருவாய்ச் சேர்ப்பது பழமொழி நானூறின் சிறப்பு, என்கிறார்.

வரதராசன்(1964) தனது பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை எனும் நூலில், மனித வாழ்வின் பல்வேறு கூறுகளை வருணித்துத் தெளிவு படுத்துவதற்காகவே தமிழ்ச்சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தியதாகக் கூறுகிறார்.

ஆய்வாளார், பழமொழி நானூறில் இடம்பெற்றுள்ள இயற்கைக் குறியீடுகளை உயிருள்ளவை உயிரற்றவை என வகைப்படுத்திவுள்ளார். உயிருள்ள விலங்குகள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செடிகொடிகள், பறவை போன்றவற்றை உவமையாகக் கொண்டு பழமொழி உணர்த்துகின்ற கருத்துகளை ஆராயவுள்ளார். அதேபோல், உயிரற்ற இயற்கை குறியீடுகளை ஐம்பெரும் பூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, வான் என வகைப்படுத்தி, பிறபொருள்கள் எனப் பிரித்து அவை வினை, பயன், மெய், உரு எனும் உவமயியலோடு பொருந்தி வருகிறதா என்றும் ஆராயவுள்ளார்.

### 1.9.4 உவமைப்பொருள்

ஒரு பாடலை மேற்போக்காகப் படிக்கும்போது ஒரு பொருளும் நுண்மையாக நோக்கும்போது வேறு ஒரு பொருளும் தோன்றுமாறு அமைப்பது உள்ளுறையாகும். ஒரு பொருளைத் தெளிவுற விளக்கக் கவிஞர்கள் உவமையைக் கையாள்வார்கள்.(குருசாமி,2012)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உவமைப்பொருளைக் கவிஞர்கள் இயற்கைப் பொருள்களிலிருந்தும், நூல்வழி அறிந்த கருத்துகளிலிருந்தும், சமுதாயப் பழக்க வழக்கங்கள், சூழல்கள் ஆகியவற்றிலிருந்தும் எடுத்துக்கொள்கிறார்கள் (அரசேந்திரன்,2005). தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியலை அடுத்து உவம இயல் இடம் பெற்றுள்ளது. இலக்கியத்தில் அழகுணர்ச்சி சார்ந்த இடங்களை விளக்கும் பகுதிகளாக இவை வருகின்றன. வினை, பயன், மெய், உரு என இலக்கிய நயமறிந்து உவமவகைகளை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வகுக்கும் ஆசிரியர், பல்வேறு உவம வகைகளை வேறுபட வந்த உவமத் தோற்றம் எனச் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார். (பார்த்தசாரதி,1985)

ஒரு பொருளைப் பிறிதொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுங்கால் அவ்விரண்டும் பொதுத்தன்மையில் ஒத்திருக்க வேண்டும்.

*"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்"*

( தொல்: உவமயியல், நூற்பா 8)

உவமயின் நோக்கம், தெரியாத பொருளின் இயல்பைத், தெரிந்த ஒரு பொருளின் ஒப்புமையால் உணர்த்துவது என்பதாகும். அவ்வாறன்றித், தெரிந்த பொருளின் சிறப்பை விளக்கப்படுத்துவதற்கு உதவும் நோக்கமும் உண்டு(அரசேந்திரன், 2005)

உவமையணி என்பது ஒப்புமை தோன்ற உரைப்பதாகும். தண்டியாசிரியர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

*பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்*
*ஒன்றும் பலவும் பொருளோடு பொருள்புணர்ந்து*
*ஒப்புமை தோன்ச்செய்வது உவமை*

( தண்டி. பா.50)

என்னும் நூற்பாவில் பண்பு, தொழில், ஆகியவற்றில் ஒன்றாகவும் பலவாகவும் வரும் பொருளோடு இயைபுபடுத்தி ஒப்பிட்டு உரைப்பது உவமையணியாகும் என்று உரைக்கிறார்.

சிறப்பு, நலன், காதல், வலி, கிழக்கிடுபொருள் ஆகிய ஐந்தினை நிலைக்களன்களாக் கொண்டு வினை, பயன், மெய், உரு என்னும் நான்கு வகையில் உவமைகள் பிறக்கும். அறவுரைகள், பொன்மொழிகள் ஆகியவற்றில் உவமைகளின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செல்வாக்கு மிகுதியாகும். உவமைகள், புலிபோலப் பாய்ந்தான் என வினை அடிப்படையிலும், மாரியன்ன வண்கை எனப் பயன் அடிப்படையிலும், துடிபோலும் இடை என வடிவு அடிப்படையிலும்( மெய்), தளிர்போலும் மேனி என நிற அடிப்படையிலும் ( உரு) (அரசேந்திரன்,2005) அமையும் என்பதைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

*வினைபயன் மெய்உரு என்ற நான்கே*
*வகைபெற வந்த உவமைத் தோற்றம்*

*( தொல்: 272)*

தொழிலும் பயனும் வடிவும் நிறமும் உவமையை விளக்குகின்றன. தொழில் (வினை) நீட்டல், முடக்கல், விரித்தல், குவித்தல் என்றும்; பயனாவது நன்மையாகவும் தீமையாகவும் கருதப்பட்டு; வடிவம் என்பது சதுரம் கோணம் என்றும் நிறமாவன வெண்மை பொன்மை முதலியன என்றும் பொருள்படும். (வெள்ளைவாரணன், 1985)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒரு பொருளின் சிறப்பை வலியுறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது. ஒரு பொருளின் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளையே உவமையாக அமைக்க வேண்டும் என்பதே தொல்காப்பியச் சிந்தனை.

இதனைத் தொல்காப்பியர்,

*உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை*

( தொல் : 274)

என்று மொழிந்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.5 வாழ்வியல் விழுமியங்கள்

மக்களின் வாழ்க்கை முறையே வாழ்வியல் ஆகும் (முத்துமாரி, 2009) மக்களின் வாழ்க்கை முறையை அவர்களின் உணவு, உடை, உறைவிடம், செய்யும் தொழில், மருத்துவ முறை, பழக்க வழக்கம், சடங்குமுறைகள், பொழுதுபோக்குகள் ஆகியவை விளக்குகின்றன.

மனிதரை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தி, மனித நிலைக்கும் பின் தெய்வீக நிலைக்கும் இட்டுச் செல்பவை விழுமியங்கள் (குமாரசாமி,2010). மனிதரில் ஆன்மிகம் வளர்ச்சிபெற அவை உதவுகின்றன. மனிதர்கள் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் உறுதுணையாக வருபவை. தனி மனித, குடும்ப, சமுதாய உலக அமைதி பேணப்படுப்படுவதற்கு ஏற்றவாறு மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவது விழுமியங்கள். மனித விழுமியங்கள் அறம் சார்ந்தவை, உண்மை தழுவியவை, அறிவு பூர்வமானவை, தூய்மையானவை, சாதனைக்குரியவை. விழுமியங்கள் வாழ்க்கைக்கு விழுப்பம் தருவதால், உயிரினும் மேலாக ஓம்பப்பட வேண்டியவை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

“Values” எனும் ஆங்கில சொல்லுக்கு மதிப்பு, பெறுமானம் என்ற பொருளும் உண்டு.( கிரியா) அது விழுமியம் என்ற தமிழ்ச்சொல்லையும் பொருளாகக் கொள்கிறது. “மனித நாகரிகம் ஆனது வெறுமனே செங்கற்களாலும் சாந்தினாலும் இரும்பினாலும் இயந்திரங்களினாலும் கட்டியெழுப்பப்படுவதன்று, மனிதர்களினாலும் அவர்களின் நற்குணப் பண்புகளினாலும் நல்லொழுக்கத்தினாலும் உருவாக்கப்படுவதே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



நயத்தக்க நாகரிகம் ஆகும்” என்கிறார் இந்தியத் தத்துவஞானி சர்வபள்ளி இராதாக்கிருஷ்ணன். பகவான் சத்தியசாயிபாபா சத்தியம், தருமம், சாந்தி, அன்பு, அஹிம்சை என விழுமியங்களை வகைப்படுத்தியுள்ளார்.

## 1.10 தொகுப்புரை

இந்த இயலானது, ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வின் நோக்கம், ஆய்வு வினாக்கள், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வுச் சான்றாதாராம், ஆய்வு எல்லை, முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம் ஆகியவற்றை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆய்வாளர் பழமொழி நானூறில் இயற்கைக் குறியீட்டு உவமைப்பொருள் சுட்டும் வாழ்க்கை விழுமியங்கள் என்னும் தலைப்பிலான இந்த ஆய்வில், பழமொழிகளின் தன்மைகளையும் சிறப்புகளையும் எடுத்துரைத்துள்ளார். மேலும், பழமொழிகளை இலக்கியங்கள் எவ்வாறாகச் சித்தரித்துள்ளன என்பதையும் விளக்கியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi